மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Singapore writer Ma. Ilangkannan's short novel 'Porudham' - A Social Perspective

Mrs. R. Selvarani

Doctoral Researcher, Department of Tamil Studies, Manonmaniam Sundaranar University, Tirunelveli, India

Manuscript ID :
MT130A0096

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 12.11.2022
Revised: 17.11.2022
Accepted: 22.11.2022
Published: 06.12.2022

Pages : 263-272

DOI:
10.5281/zenodo.7402825

ABSTRACT:

Ma. Ilangkannan is one of Singapore's greatest writers. He is the first Tamil writer to receive Thailand's Southeast Asian Writing Award. Born and brought up in Singapore, he has expressed the lifestyles, joys and sorrows of Singaporeans through his writing. The first short novel in his short novel collection is 'Porudham'. The novel is a renaissance piece of literature on marriage suitability, one of the superstitions prevalent in the 1960s. Parents who marry off their children in the name of favouritism act with a false mind-set that only favourability is enough without giving importance to anything else. At the end of the novel, the author beautifully presents the impotence of the human caste, those who are unable to let go of this habit even after realizing that astrology is not something to follow completely, through the character of Chellammal. The purpose of this article is to study the effects of such a ritual on the married life of children.

KEYWORDS:

Astrology, Marriage, Matchmaking, Remedy, Superstition, Remarriage

சிங்கை மா. இளங்கண்ணனின் குறுநாவல் 'பொருத்தம்' - ஒரு சமுதாயப் பார்வை

திருமதி. செல்வராணி,
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழியல் துறை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

மா. இளங்கண்ணன் சிங்கப்பூரின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவராவார். இவர் தாய்லாந்தின் தென்கிழக்கு ஆசிய எழுத்து விருதினைப் பெற்ற முதல் தமிழ் எழுத்தாளர். சிங்கையில் பிறந்து வளர்ந்த இவர் சிங்கை மக்களின் வாழ்வியல் முறைகளை, இன்ப துன்பங்களைத் தம் எழுத்தின்மூலம் வடித்துள்ளார். இவரது குறுநாவல் தொகுப்பில் இடம்பெற்றுள்ள முதல் குறுநாவல் 'பொருத்தம்' ஆகும். அறுபதுகளில் மக்களிடையே புரையோடிக்கொண்டிருந்த மூடநம்பிக்கைகளில் ஒன்றான திருமணத்திற்குப் பொருத்தம் பார்க்கும் பழக்கத்தைப்பற்றிய மறுமலர்ச்சி இலக்கியமாக இந்நாவல் அமைந்துள்ளது. பிள்ளைகளுக்குத் திருமணம் செய்துவைக்கும் பெற்றோர்கள் சாதகம் பார்த்தல் என்ற பெயரில் வேறு எதற்கும் முக்கியத்துவம் தராது சாதகம் மட்டும் பொருந்தினால் போதும் என்ற தவறான மனப்போக்குடன் செயல்படுகின்றனர். நாவலின் இறுதியில் சோதிடம் அப்படி ஒன்றும் முழுமையாகப் பின்பற்றுவதற்குரிய ஒன்றல்ல என்று உணர்ந்த பிறகும் நெஞ்சில் போய் ஒட்டிக்கொண்ட பழக்கத்தால் அதனை விட்டுவிட முடியாமல் தவிக்கும் மனித சாதியின் இயலாமையைச் செல்லம்மாள் என்னும் கதாபாத்திரம் மூலம் அழகாக முன் வைக்கிறார் ஆசிரியர். இத்தகைய மூடப்பழக்கவழக்கம் பிள்ளைகளின் மணவாழ்க்கையில் ஏற்படுத்தும் பாதிப்புகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கருச்சொற்கள்

சோதிடம், திருமணம், மணப்பொருத்தம், பரிகாரம், மூடநம்பிக்கை, மறுமணம்

முன்னுரை

சிங்கையின் தமிழ் இலக்கிய உலகில் தனக்கெனத் தனி முத்திரை பதித்தவர் மா. இளங்கண்ணன் ஆவார். இவர் அறுபதுகளில் இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்து இன்றளவும் சிறுகதை, நாவல் என்று தரமான படைப்புகளை வழங்கி

வருகின்றார். இவரது படைப்புகள் அனைத்தும் மக்களின் அன்றாட வாழ்வியல் சிக்கல்களை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. புலம்பெயர் தமிழர்கள் சிங்கையில் குடிபுகுந்தபோது தங்கள் பண்பாட்டு வேர்களைத் தங்களுடன் பெயர்த்து இம்மண்ணில் பதித்து வைத்தனர். அவற்றை இன்றளவும் சிங்கை மக்கள் பின்பற்றி வருவதனை வருங்காலத் தலைமுறையினருக்குத் தம் எழுத்துகள் மூலம் எடுத்துரைக்கிறார் ஆசிரியர். அதேவேளையில் அன்றைய மக்களிடம் காணப்பட்ட மூடப்பழக்க வழக்கங்களையும் சாடுகிறார். 'பொருத்தம்' என்ற குறுநாவலில் பத்து பொருத்தமும் சரியாக அமையப்பெற்ற திருமணம் தோல்வியில் முடிந்தது; ஆனால் பொருத்தமில்லை என்று சோதிடர் சொன்ன பின்பும் பரிகார நாடகத்தின் வாயிலாக நடந்தேறிய திருமணம் வெற்றிக் காண்கிறது. ஒரே குடும்பத்தில் இவ்விரண்டு நிகழ்வுகளும் நிகழ்ந்த பின்னரும் சாதகத்தை நம்ப வேண்டுமா? வேண்டாமா? என்ற மனப் போராட்டத்துடன் மீண்டும் அதன்பின் செல்லும் மக்களின் அவல நிலையைப் படம் பிடித்துக்காட்டுகிறார் ஆசிரியர். எத்தனை பெரியார்கள் வந்தாலும் இம்மக்களிடம் புரையோடிக்கிடக்கும் மூடநம்பிக்கையை மாற்ற இயலாது என்ற எழுத்தாளரின் ஏக்கத்தை இந்நாவலில் காணலாம்.

குறுநாவல்

காலத்தின் தேவையறிந்து இலக்கியப் படைப்பிற்கான சாதனமாக உரைநடை பயன்பட்டது. முதலில் இது 'புனைகதை' வடிவங்களில் சாதனைகளை வெளிப்படுத்தத் தொடங்கியது. தமிழில் புனைகதை இலக்கியத்தின் ஒரு பிரிவாக நாவல் கருதப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய நிலப்பரப்பில் நாவல் மிகப் பெரும் பகுதியை ஆட்கொண்டுள்ளது. நூற்றாண்டு கால வரலாற்றை உடைய நாவல் பின்னர்க் குறுநாவல் வடிவிலும் வெளிவந்தது. இலக்கியத்திற்குரியத் தரத்தை விட்டுக்கொடுக்காமல் அளவில் புதினத்தைவிடச் சிறியதாக இருப்பதைக் குறும்புதினம் எனக் கூறலாம். "பாத்திரப் படைப்பிற்கு இடம் இன்றிக் கதைப்போக்கிற்கு முக்கியத்துவம் அளிக்கும் வடிவம்"[1] என மாலன் குறும்புதினத்திற்கு விளக்கம் அளிக்கிறார். மனித உணர்வுகள், சிந்தனைகள், செயல்கள் ஆகியவற்றை விளக்கிக்காட்ட குறுநாவல் பயன்படுகிறது.

கதைச் சுருக்கம்

மணிமொழி, பூங்குன்றன் திருமணத்திற்குப் பெற்றோர்கள் பொருத்தம் பார்க்கின்றனர். சோதிடர் இவர்களுக்குப் பொருத்தம் சரியில்லை என்று சொல்ல, வேறு ஒரு சோதிடரைப் பார்த்து பரிகார நாடகமூலம் திருமணம் நடந்தேறியது. தம்பதியினரின் இல்லற வாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக அமைகிறது. பூங்குன்றனின்

தங்கை மலர்விழி இளவழகனைக் காதலிக்கிறாள். இவர்களது திருமணத்திற்காகப் பொருத்தம் பார்க்க போகும்போது பொருத்தம் மிகவும் சரியாகவே அமைய பெற்றோர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் திருமணத்தை நடத்தி வைக்கிறார்கள். ஆனால் இத்திருமண வாழ்க்கை வெகுவிரைவில் சீரழிந்துவிட்டது. இளவழகன் 'பிரைன் டியூமரால்' அகாலமரணமடைந்து விடுகின்றான்.

ஒரே குடும்பத்தில் இரண்டு திருமணங்களும் நடந்தேறுகின்றன. இவ்வாறு இரண்டு நிகழ்வுகள் நடந்த பின்பும் 'ஜோதிடத்தை நம்பலாமா? நம்பக்கூடாதா' என்ற மன போராட்டத்தில் குடும்பத் தலைவியோ மீண்டும் மகளின் மறுமணத்திற்காகத் சோதிடரைப் பார்க்க செல்கிறாள்.

கதைக்கரு

குறுநாவலின் முதன்மைக்கூறாய் அமைவது கதைக்கருவாகும். ஒவ்வொரு குறுநாவலும் கதைக்கருவுடையதாய் அமைந்திருக்கும். இது குறுநாவலின் வளர்ச்சிக்கு நாவலாசிரியருக்குத் துணை புரிகிறது. "கருப்பொருள் தன் இலக்கியப் படைப்பின் மையமாகவும் ஆதிக்கம் செலுத்த கூடியதாகவும் இருக்கும். ஸ்தூலமான ஒன்றைப் பாத்திரம், செயல் போன்றவற்றால் பருண்மையாக்கலாம்"[2] என்று இலக்கியச் சொற்கள் அகராதியில் 'ஹர்ம்ஸ்வர்த்' கருப்பொருளை வரையறைச் செய்வதாக நா. சுப்பிரமணியன் கூறுகிறார். குறுநாவலுக்குரிய கதைக்கரு இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. கதையாசிரியர் தாம் விரும்பிய, கண்ட, கேட்ட, அனுபவித்த எதையும் கதைப் பொருளாக அமைத்துக்கொள்ளலாம். பல்லினச் சமுதாயமான சிங்கையில் பிற இனத்தவர்கள் சாதகம், சோதிடம் போன்ற எதுவுமின்றி மனப்பொருத்தம் ஒன்றையே மனத்தில்கொண்டு திருமணங்களை முடித்து வைக்கின்றனர். ஆனால் தமிழர்களோ இன்னும் சாதகம் என்ற பெயரில் வரன் பார்த்துப் பொருத்தம் இல்லையேல் வரன் அமையாது திருமண வயது தள்ளிப்போகும் சமூக அவலத்தினை ஆசிரியர் இந்நாவலின் கருப்பொருளாகக் கொண்டுள்ளார்.

கதை மாந்தர்கள்

குறுநாவலில் பாத்திரப்படைப்பு இன்றியமையாத இடத்தைப் பிடிக்கிறது. "நாவல் உலகம் உருவாக, நிலைபெறக் காரணமாவது பாத்திரங்கள். இப்பாத்திரங்கள் ஆசிரியனின் அனுபவத்தின் அடிப்படையில் கலை உணர்வோடு படைக்கப்பட்டவை"[4] என்ற பாத்திரங்களைப்பற்றிய டேவிட் சிசிலின் கருத்தைக் கோ.வெ. கீதா, தம் தி. ஜானகிராமனின் 'நாவல்கலை' நூலில் மேற்கோளாகக் கையாண்டிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுவாகக் குறுநாவலில் இடம்பெறும் கதைமாந்தர்களை இரு வகைப்படுத்துவார் அறிஞர் ஈ.எம். ஃபாஸ்ட்டர். ஒன்று முழுநிலை மாந்தர் (Round Character), மற்றொன்று ஒருநிலை மாந்தர் (Flat character). நாவலின் தொடக்கம் முதல் இறுதிவரை வலம் வந்து வாசகர்களின் மனத்தில் முழுமையான இடத்தைப் பிடிப்பவர்களே 'முழுநிலை மாந்தர்கள்'. கதையின் கட்டுக்கோப்பிற்காக இடையிடையே தோன்றி இடையிடையே மறைந்து விடுபவர்கள் 'ஒருநிலை மாந்தர்கள்'[3]. செல்லம்மா, மணிமொழி, இளவழகு, பூங்குன்றன், மலர்விழி போன்றோர் கதையின் போக்கிற்கு ஏற்ப மெல்ல மெல்ல வளர்ந்து அவர்களின் பண்பு நலன்களாலும் செயல்களாலும் அறிவாற்றலாலும் வாசகர்கள் உள்ளத்தில் முழுமையாக இடம்பிடிப்பதால் இவர்களை முழுநிலை மாந்தர்கள் எனலாம். மாறாகச் சோதிடர்களான கோவிந்தராசு மற்றும் சொக்கலிங்கம், ஆண்டாள், பெருமாள், போன்றோர் கதையின் வளர்ச்சிக்கு இடையிடையே வந்து போகின்றனர். இதனால் இவர்கள் ஒரு நிலை மாந்தர்களாக விளங்குகின்றனர்.

தொடக்கமும் முடிவும்

செல்லம்மாள் தன் மகன் பூங்குன்றனுக்குப் பெண் பார்ப்பதற்காக ஏற்பாடு செய்கிறாள். பெண்ணின் புகைப்படம் அவள் கையில் இருக்கிறது. அதைப் பார்த்ததும்

"செல்லம்மாள் முகத்தில் செண்பகப்பூ! மகன் பூங்குன்றனுக்குப் பார்க்கப் போகும் பெண்ணின் சிரித்த முகம் அவள் கையில் இருந்தது"

என மகனின் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும்போது அவள் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியின் வெளிப்பாடாக நாவல் தொடங்குகிறது. அதேவேளையில் நாவலின் முடிவும் செல்லம்மாள் தன் மகளின் மறுமணம் நிச்சயிக்கப்பட்ட செய்தியைக் கேட்டதும் அவள் கண்களில் தெரிந்த மகிழ்ச்சியின் வெளிப்பாடாக அமைகிறது.

"என்ன அப்படிப் பார்க்குறீங்க? கல்யாணத்துக்கும் நல்ல நாள் குறிச்சாச்சு! அதுதான் இது" என்றாள்.

"செல்லம்மாள் கண்களில் இன்பக் கண்ணீர்"

இவ்வாறு தொடக்கமும் முடிவும் செல்லம்மாள் என்ற கதாபாத்திரம் தன் மகன் மற்றும் மகள் திருமணத்தில் எவ்வாறு பூரித்துப்போகிறாள் என்பதனை அவளது முகபாவனைகளை வைத்தே தொடங்கி முடித்திருக்கிறார் ஆசிரியர். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பதற்கு ஏற்ப அவளது எண்ண அலைகளை முகபாவனைகளின் வாயிலாக வாசகர்களுக்கு வெளிப்படுத்தும் வண்ணம் தொடக்கமும் முடிவும் அமைந்திருப்பது நாவலுக்கு மெருகூட்டுவதாகவே அமைந்துள்ளது.

உரையாடல்கள்

புதினங்களில் கதைமாந்தர்களின் உரையாடல்களின் வழிக் கதைமாந்தர் தம் பண்புகளை உணர்த்துவதற்கும் கதைப் பொருளைச் சிறப்பாக வெளிப்படுத்துவதற்கும் கதையாசிரியர் முற்படுவார். உரையாடலை ஒரு தேர்ந்த கலைஞனின் வலிய ஆயுதமாக விளங்கும் திறமையுடையதாகத் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர்.

"வெற்றிகரமான நல்ல உரையாடல் கருவின் வளர்ச்சி, கதைமாந்தரின் பண்புவிளக்கம், நாவலின் தொனி (tone), கதையின் இயக்கம் முதலியவற்றிற்குக் காரணமாகிறது எனலாம்"[5] என முனைவர் மா. இராமலிங்கம், உரையாடல் எவ்வாறு நாவலின் கதைக்கருவின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

உரையாடல் என்பது நாவலின் உயிரோட்டமாகும் என்பதற்கிணங்க 'பொருத்தம்' என்ற குறுநாவலில் செல்லம்மாள் - மாணிக்கம் ஆகியோரின் உரையாடல் நகைச்சுவையாகவும் அதேவேளையில் கருத்தாழமுடையதாகவும் அமைந்துள்ளது. மகனின் திருமணத்திற்காகப் பொருத்தம் நன்றாக அமைய வேண்டும் என்று செல்லம்மாள் வேண்டிக்கொண்டிருக்கிறாள். இதைப் பார்த்த அவளது கணவர் மாணிக்கம்,

"இவ்வளவு சொல்லியும் இன்னும் பொருத்தம் பொருத்தங்கிற? உனக்கும் எனக்கும் பொருத்தம் பார்த்தா கலியாணம் செஞ்சு வச்சாங்க? இல்லையே! என்றார்...

"அதான் உறவு விட்டுப் போகக் கூடாதுன்னு ஒட்ட வைச்சிட்டாங்க" என்று சிரித்தாள்.

"அவங்க பொருத்தம் பார்க்காம கலியாணம் பண்ணி வைச்சது எவ்வளவு பெரிய தப்புன்னு எனக்கு இப்பதான் புரியுது! அன்னைக்கே பொருத்தம் பார்த்திருந்தாங்கனா உனக்கும் எனக்கும் ஏழாம் பொருத்தம்ன்னு அப்போவே தெரிஞ்சிருக்கும்! நானும் உனக்கிட்ட இருந்து தப்பிச்சி இருப்பேன்! என்று சிரித்தார்"

என நகைச்சுவை ததும்ப அவர் தனது திருமண நிகழ்வைப்பற்றி நினைவுகூர்வது கணவன் மனைவியிடையே நிலவும் நெருக்கத்தை வெளிப்படுத்துவதாக அமைவதோடு மக்களின் சிந்தனைக்கும் விருந்தாக அமைகிறது.

பொருத்தமின்றிப் பரிகார நாடகத்தின்மூலம் தன் மகனுக்குத் திருமணம் நடந்தேறியதால் மருமகள்மீது எப்போதும் செல்லம்மாளுக்குக் கோபம் இருந்தது. அதனைத் தன் பேச்சின் மூலம் வெளிப்படுத்திக்கொண்டே இருந்தாள். மகளின்

திருமணநாளன்று தாலி கட்டும் வேளையில் மருமகள் வாந்தி எடுத்தாள். இச்செய்தியை அறிந்தவுடன் செல்லம்மாள்

“தரித்திரம் பிடிச்ச சனியன்! தின்ன தெரியாம எதையாகிலும் தின்னுட்டு இங்கே வந்து கக்குது!” என்றாள்.

மணவறைக்கு அருகில் நின்ற பூங்குன்றன், “எந்த நேரத்தில் என்னம்மா பேசுறீங்க என்றான்”.

தனக்குப் பிடிக்காத மருமகள் என்பதால் தன்னுடைய பேச்சின் மூலம் எவ்வாறு அவளை அவமானப்படுத்துகிறாள் என்பதனை இவ்வுரையடல்மூலம் தெரிந்துகொள்ளலாம். தாலி கட்டிய மனைவியையும் உயிர்கொடுத்த அம்மாவையும் மனம் நோகாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய இடத்தில் பூங்குன்றன் ‘இருதலைக்கொள்ளி எறும்பாக’ துடிப்பதையும் இவ்வுரையாடல் உணர்த்துகின்றது. இவ்வாறு கதாபாத்திரங்களின் பண்புநலன்களை உரையாடல்மூலம் வெளிக்கொணர்ந்ததே நாவலின் வெற்றிக்கு முக்கியக் காரணியாக அமைந்துள்ளது.

சமுதாயப் பின்னணி

அறுபதுகளில் சிங்கையில் புலம்பெயர்ந்த தமிழர்களிடையே மூட நம்பிக்கை நிலவிவந்தது. மற்ற இனத்தவர்களுடன் ஒன்றிணைந்து செயல்படுவது தமிழினத்தின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும். ஆனால் தமிழர்களிடையே நிலவிவந்த மூடபழக்கவழக்கங்களால் அவர்கள் தங்கள் வாழ்வியல் முறைகளில் பின்தங்கி காணப்பட்டனர்.

“பொதுவாக நாவல் சமுதாயத்தையே பொருளாகக் கொள்கிறது. சமுதாயத்தைப் பெரிதும் நடப்பியல் முறையில் நாவல் காணுகிறது”[6] என நாவலுக்கும் சமுதாயத்திற்கும் உரியத் தொடர்பினைச் சுந்தரராஜன் குறிப்பிடுகிறார்.

மணிமொழிக்குச் செவ்வாய் தோசம் இருப்பதால் வரன் அமையாது திருமணம் தள்ளிப் போய்க்கொண்டே இருக்கிறது. இதனால் அவள் ஒவ்வொரு முறையும் அவளைப் பெண் பார்க்க வரும்போது மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகி, தன் நிலையை எண்ணி வருந்துகிறாள். திருமணம் என்பது வாழ்க்கையில் மிகப்பெரிய அருட்கொடை; ஆனால் தோசம் என்ற பெயரில் பல பெண்கள் கன்னிப் பெண்களாகவே தங்கள் வாழ்க்கையைக் கழிக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுவதனை இக்குறுநாவல் வெளிப்படுத்துகிறது.

“பஜார் மாலக் கடைக்காரவங்க ரெண்டு வாரத்துக்கு ஒரு தடவை ஒவ்வொரு இடமாப் போயி கடை போட்டு, சரக்கை அடுக்கி வைக்கிற மாதிரி அம்மாவும் என்னை

அலங்காரம் செஞ்சு அழைச்சுக்கிட்டுப் போயி அவங்களுக்கிட்டே காட்டி இருக்காங்க! காட்டி என்ன செய்ய? பஜார் மாலக் கடைக்கு வர்றவங்க சாமான்களை உத்து உத்துப் பார்த்துட்டு வாங்கப் போறதைப் போல மாப்பிள்ளைகளும் என்னை உத்து உத்துப் பார்த்துட்டுப் போனதுதான் மிச்சம்! அவங்களைப் போலத்தானே இப்ப வர்ற இந்த மாப்பிள்ளையும் இருப்பாரு!"

எனப் பெண்கள் சந்தையில் விற்கும் பொருட்களிலும் கீழானவர்களாகக் கருதப்பட்ட சமூக அவலத்தை மணிமொழி மூலம் புடம்போட்டுக் காட்டியுள்ளார் எழுத்தாளர். பெண்களைப் போகப்பொருளாகவும் சடப்பொருளாகவும் பார்க்கும் சமுதாயம், அவர்களுக்கும் மனது என்று ஒன்று இருக்கிறது என்பதை உணரும் காலம் எக்காலம் என்பது பெண்குலத்தின் ஏக்கமாக உள்ளது என்று பெண் விடுதலைக்கான பெண்ணியக் கருத்தாக்கத்தை மணிமொழி என்ற கதாபாத்திரம் வழியாக வெளிப்படுத்தியுள்ளார்.

"சீன மலாய்க்காரவங்க ஜாதகப் பொருத்தம் பாத்தா கலியாணம் செஞ்சுக்கிறாங்க? இல்லையே! நம்மவங்கதான் கலியாணப் பேச்செடுத்ததும் பொருத்தம் பார்க்க ஜாதகத்தைத் தூக்கிக்கிட்டு சோசியருக்ககிட்ட ஓடுறாங்க! சோசியரு பொருத்தம் இருக்குன்னு சொன்னாத்தான் கலியாணம் செஞ்சுவைக்கிறாங்க! இல்லேன்னா போச்சு! பெண்ணுக்கும், மாப்பிள்ளைக்கும் மனப் பொருத்தம் இருந்தாலும் அதைப் பொசுக்கிடுறாங்க! தோஷம் இருக்குனு சொல்லி அவங்க காதலைக் குழி தோண்டி புதைச்சிடுறாங்க!"

சீன இளம் ஜோடிகளைப் பார்த்த இளவரசனது உள்ளக் குமுறல்தான் இவ்வரிகள். மேற்கத்திய கலாசாரத்தால் பிற இனத்தவர்கள் அறிவியல் நோக்கில் அனைத்தையும் உணர்ந்து தங்களைச் சமுதாய மாற்றத்திற்கு ஏற்பத் தகவமைத்துக்கொண்டு மேம்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். மாறாகப் புலம்பெயர் தமிழர்கள் இனம், மதம், சாதி எனப் பல்வேறு வேறுபாடுகளிலும் சகுனம் பார்த்தல், நல்ல நேரம், கெட்ட நேரம், நல்ல நாள் போன்ற மூட நம்பிக்கைகளிலும் மூழ்கியிருந்தனர். சமுதாயத்தில் நிலவிய மூடப்பழக்கவழக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து முற்போக்குச் சிந்தனையுடன் மக்களைச் செயல்படத் தூண்டுவதன் வெளிப்பாடே இக்குறுநாவல்.

மொழிநடை

கதையின் கருத்துவெளிப்பாட்டிற்கு மொழிநடை இன்றியமையாததாகும். படைப்பாளியின் படைப்புத்திறனைக் காட்டும் அளவுகோலே இம்மொழிநடைதான். "படைப்பாளிக்கு நடை ஒரு சாதனம்"[7] எனப் பியூலாமெர்சி மொழிநடையைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

இளங்கண்ணனின் மொழி நடை கதைச்சூழலுக்கு ஏற்ப அமைந்துள்ளது. வழக்குச் சொற்களுடன் பேச்சுத் தமிழையும் இனிய செந்தமிழ் நடையையும் கையாண்டு இக்குறுநாவலைப் படைத்துள்ளார் ஆசிரியர். செல்லம்மாவின் மகள் மலர், இளவழகைக் காதலிக்கிறாள். அவனுடன் வெளியில் சென்று வருவதைச் செல்லம்மாள் பார்த்து விடுகிறாள். அதனைப் பார்த்து

“சினிமாவுல வர்ற மாதிரி காதல் கீதல்ன்னு சுற்றித்திரிஞ்சே, உன் காலை ஒடுச்சுப்புடுவேன்னு சொல்லியிருக்காங்க”

என்று தன் அம்மா கூறியதாக இளவழகிடம் வட்டார வழக்கில் உரையாடுவதனைக் காணலாம்.

மகளின் மறுமணத்தைப்பற்றிச் செல்லம்மாள் எண்ணிக் கொண்டிருந்ததனை,

“மலரின் மறுணத்தைப்பற்றி அசை போட்டுக்கொண்டிருந்த அவளுக்குத் திடீரென்று ஓர் ஐயம் எழுந்தது”

என அவளது நிலையை இலக்கிய நடை வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

“நீண்ட நேரத்துக்குப் பிறகு அவளுக்குத் துணிவு பிறந்தது”

என்ற வரியில் எழுத்து நடையினை நாம் காணலாம். இவ்வாறு குறுநாவல் முழுவதும் எளிய மொழிநடை கையாளப்பட்டிருப்பது இளங்கண்ணனின் தனித்தன்மையை வெளிப்படுத்துகிறது.

முடிவுரை

முற்போக்குச் சிந்தனையாளர்கள் பலர் தோன்றிய நம் தமிழ் மண்ணில் இன்றும் மக்களிடையே மூடப்பழக்கவழக்கங்கள் நிலவி வருவது வருந்தத்தக்கதாகும். விஞ்ஞான அறிவும் கல்வி அறிவும் உலகளாவிய நிலையில் வளர்ந்து வரும் இந்நாளில் மூடநம்பிக்கைகளில் மக்கள் மூழ்கியிருப்பது அறியாமை என்னும் அரக்கன் இக்காலக்கட்டத்திலும் ஆட்சிபுரிகிறான் என்பதற்கான சான்றாகும். பொருத்தம் சரியாக அமையப்பெற்று மனமகிழ்ச்சியுடன் நடந்கேறிய திருமணமானது குறுகிய காலத்திலேயே சிதைந்துவிட, பொருத்தமேயின்றி அரங்கேறிய திருமணமோ நீடித்து நிலைத்து நின்றது. திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றனவா? அல்லது ரொக்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றனவா? என்ற விவாதங்களுக்கு இடையே அவை மனப்பொருத்தத்தில்தான் நிச்சயிக்கப்பட வேண்டும் என்பதனைச் சிங்கை மா. இளங்கண்ணன் வருங்கால இளம்தலைமுறையினர் மனத்தில் இக்குறுநாவல் வழியாக ஆழப்பதித்துள்ளார்.

அடிக்குறிப்புகள்

1. இராம மூர்த்திமோகன், நாவல் வளர்ச்சி ப.102
2. நா. சிவசுப்பிரமணியன், சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், (ஹர்ம்ஸ்வர்த்கூற்று) ப.10
3. இரா. வேல்முருகன், சிங்கப்பூர்த் தமிழ் - இலக்கியம் பன்முகப் பார்வை, ப.121.
4. கோ. வெ. கீதா, தி. ஜானகிராமன் நாவல் கலை, ப.67
5. மா. இராமலிங்கம், நாவல் இலக்கியம், ப.88
6. பெ.கோ. சுந்தரராஜன், சோ. சிவபாதசுந்தரம், தமிழ்நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும், ப.13.
7. பியூலாமெர்சி, இருபதில் சிறுகதைகள், ப.78.

துணைநூற்பட்டியல்

1. இராம மூர்த்திமோகன், நாவல் வளர்ச்சி, மணிவாசகர் பதிப்பகம், 1989
2. நா. சிவசுப்பிரமணியன், நாவல் படிக்க, இலக்கியத் தேடல் வெளியீடு, மதுரா பதிப்பகம், மதுரை, 1984 முதற்பதிப்பு.
3. இரா. வேல்முருகன், சிங்கப்பூர்த் தமிழ் - இலக்கியம் பன்முகப் பார்வை, தமிழ் ஆர்ட் பிரிண்டர்ஸ், 10, ஜலான், பசார், #15-03, சிம் லிம் டவர், சிங்கப்பூர் - 208787, 2008.
4. கோ. வெ. கீதா, தி. ஜானகிராமன் நாவல் கலை, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை, 1994 முதற்பதிப்பு.
5. மா. இராமலிங்கம், நாவல் இலக்கியம், கணபதி பிராசஸ், சென்னை - 5 முதற்பதிப்பு 2014.
6. பெ.கோ. சுந்தரராஜன், சோ. சிவபாதசுந்தரம், தமிழ்நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும், கிறித்துவ இலக்கியச் சங்கம், சென்னை, 1977.
7. பியூலாமெர்சி, இருபதில் சிறுகதைகள், ஜெயக்குமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில், 1974.
8. **முதன்மை நூல்** - மா. இளங்கண்ணன், பொருத்தம், கன்னிகாதானம், எங்கே போய்விடும் காலம், சிங்கை மா. இளங்கண்ணனது நாவல்கள், சுவடிப் பதிப்பகம், சென்னை 2006

REFERENCES

1. Rama Murthymohan, The Development of the Novel, Manivaskar Publishing House, 1989.
2. N. Sivasubramanian, Novel Reading, Literary Search Publication, Madura Publishing House, Madurai, 1984 First Edition.
3. R. Velmurugan, Singaporean Tamil – A Multifaceted Perspective on Literature, Tamil Art Printers, 10, Ilan, Bazaar, #15-03, Sim Lim Tower, Singapore - 208787, 2008.
4. G.V. Geetha, T. Janagiraman Novel Art, New Century Book House, Chennai, 1994 First Edition.
5. M. Ramalingam, Novel Literature, Ganapathi Process, Chennai - 5 First Edition, 2014.
6. P.G. Sundararajan, So. Sivapadasundaram, Tamil Novel Century History and Development, Christian Literature Society, Chennai, 1977.
7. Beulamercy, Twenty Short Stories, Jayakumari Stores, Nagercoil, 1974.
8. **Main Source** - Ma. Ilangkannan, Suitability, Kannikadanam, Where does time go, Singai Maa. Ilangakannan's Novels, Suvadip Publishing House, Chennai 2006.